# போதைப் பொருள் பாவனையைக் கையாளுவதில் இஸ்லாமிய உளவளத்துணையின் பங்கு - காத்தான்குடி பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

# The Role of Islamic Counselling in handling drug addiction – a research based on Kattankudy

M.M. Fathima Suitha[1] & M.T. Habeebullah[2]

*[1&2] Department of Arabic Language, South Eastern University of Sri Lanka*

*[1]fathimasueedha1998@gmail.com, [2]habeebullah@seu.ac.lk*

***ABSTRACT***

*Drugs are consumed by people for intoxication and entertainment. They affect the body, mental, social behaviour among the individuals and community. When drug addicts are identified as illegal, they are arrested by the police and then sent to rehabilitation centers at the request of the family and released after the treatment. However, they are trying to use them continuously due to the addiction. At this time, the most of the Muslim counsellors those who learnt the counselling theories from west and general counselling perspectives are trying to treat the drug addicts. It leads them to across the limitations of the Islamic theories and practices. According with that, this research aims to explore the role of Islamic counselling in the treatment of drug addiction among Muslims. This qualitative research uses primary and secondary data through descriptive analysis. Interview was conducted with 11 officers of six associations. The statistical data were gathered from Kattankudy Divisional Secretariat and other materials related this topic were gathered from books, research papers, articles and websites. Drug users are found in Kattankudy and there are occurring drug related crimes. A quick and suitable solution can be found when using Islamic counselling in the appropriate way.*

***Keywords:*** *Drugs, Counselling, Islamic Counselling, Treatment*

**ஆய்வுச் சுருக்கம்**

*போதைப் பொருட்கள் போதையேற்றிக் கொள்வதற்காகவும், பொழுதுபோக்கிற்காகவும் மக்களால் நுகரப்படுகிறது. இச்செயற்பாடானது உடல், உள, சமூக நலத்திற்கு ஊறு விளைவிக்கும் செயற்பாடாகும். இதனால் தனிமனிதன், சமூகம் என பல தரப்பினரும் பாதிக்கப்படுகின்றனர். மேலும் போதைப்பொருள் பாவனையாளர்கள் சட்டத்திற்குப் புறம்பாக செயற்படுபவர்களாக அடையாளப்படுத்தப்படும் போது அவர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, பின் குடும்பத்தின் கோரிக்கைக்கேற்ப நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் புனர்வாழ்வு மையங்களுக்கு (*Rehabilitation Centre*) அனுப்பப்பட்டு சிகிச்சையின் பின் வெளியேறுகின்றனர். எனினும் அவ்வாறு வெளியேறுகின்றவர்களும் சூழ்நிலை காரணமாக மீண்டும் போதைப் பழக்கத்தை தொடர்வதை அவதானிக்க முடிந்தது. மேற்படி போதைப் பொருள் பாவனையாளர்களுக்கு*

*உளவளத்துணை வளங்கும் இன்றைய பெரும்பான்மையான முஸ்லிம் உளவளத்துணையாளர்களைப் பொறுத்தவரையில் மேற்கத்தேய அல்லது பொது உளவளத்துணையைக் கற்று அதன் அடிப்படையில் மாத்திரம் முஸ்லிம்களுக்கு சேவை செய்கின்ற போது சில இடங்களில் இஸ்லாமிய கோட்பாடுகள், நடைமுறைகள், வரையறைகளைக் கடந்து பயணிக்கும் அபாயம்எழுந்துள்ளது. இந்த நிலையிலிருந்து முஸ்லிம்களை பாதுகாக்க வேண்டும் என்பது காலத்தால் உணர்த்தப்பட்ட உண்மை. அந்த வகையில், இவ்வாய்வானது போதை பழக்கத்திற்குட்பட்ட முஸ்லிம் சேவை நாடிகளுக்கு உதவுவதில் இஸ்லாமிய உளவளத்துணையின் பங்கினை ஆராய்வதை இவ்வாய்வு நோக்கமாக கொள்கின்றது. பண்பு ரீதியான இவ்வாய்வானது முதலாம் மற்றும் இரண்டாம் நிலை தரவுகளிலிருந்து விபரிப்பு ஆய்வு முறையியலைப் பயன்படுத்துகின்றது. இவ்வாய்வுக்கான முதலாம் நிலை தரவுகள் சேகரிப்புக்காக ஆறு நிறுவனங்களைச் சேர்ந்த 11 அதிகாரிகளிடம் நேர்காணல் செய்யப்பட்டதோடு காத்தான்குடிப் பிரதேச செயலக சமுதாய அபிவிருத்தி உத்தியோகத்தரின் ஊடாக போதைப் பொருள் பாவனையாளர்களின் எண்ணிக்கை பெறப்பட்டது. மேலும் ஆய்வுக்கான கோட்பாட்டு அமைப்புத் திட்டத்தினை நிறுவுவதற்காக இரண்டாம் நிலை தரவுகள் என்பன மீள்ளாய்வுக்குட்படுத்தப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் காத்தான்குடிப் பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனையாளர்கள் காணப்படுவதுடன் அதற்கு ஏற்றாற் போல் போதைப்பொருளுடன் தொடர்புபட்ட குற்றச் செயல்களும் நடந்தவண்ணம் உள்ளது. அந்த அடிப்படையில் அதனை கையாள்வதற்கு பொருத்தமான முறையாக இஸ்லாமிய விழுமியங்களோடு செயற்படும் இஸ்லாமிய உளவளத்துணையினைப் பயன்படுத்தும் போது விரைவானதும், நிரந்தரமானதுமான தீர்வினை பெற முடியும்.*

***திறவுச் சொற்கள்:*** *போதைப் பொருள், உளவளத்துணை, இஸ்லாமிய உளவளத்துணை, சிகிச்சை*

---

### *1.அறிமுகம்*

*சமூகத்தின் அமைதியான இருப்பைக் கேள்விக்குறியாக்கக் கூடிய சமூக, உள, ஆன்மீக பிரச்சினைகளில் ஒன்றாக போதைப் பொருள் பாவனை காணப்படுகின்றது. இப் போதைப்பொருள் பாவனையானது வருடா வருடம் தவறாது உயர்ந்துகொண்டே செல்வதனை United Nations Office on Drugs and Crime (UNODC) இனுடைய அறிக்கையினூடாக அவதானிக்க முடிகின்றது. மேலும் 2030ம் ஆண்டாகும் போது வருமானம் குறைந்த நாடுகளில் போதை பொருள் பாவனையாளர்களின் எண்ணிக்கை தற்போதைய எண்ணிக்கையைவிட மேலும் 43% அதிகரிக்கும் எனவும், நடுத்தர வருமானம் பெறும் நாடுகளில் தற்பொழுது காணப்படும் அளவினை விட மேலும் 10% அதிகரிக்கும் எனவும், உயர் வருமானத்தினை கொண்ட நாடுகளில் தற்போதைய பாவனையாளர்களின் எண்ணிக்கை ஒரு வீதத்தினால் குறைவடையும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது (UNODC Report, 2021).*

*2019ஆம் ஆண்டு தரவுகளின்படி இலங்கை போதைப் பொருள் பாவனையில் உலகலாவிய ரீதியில் 4வது இடத்தை பெற்றுள்ளது. இப் போதைப் பொருள் பாவனையினைக் முறைப்பதற்கு பல்வேறு தரப்பினராலும் பல்வேறுபட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், போதைப் பொருள்; இலகுவாகவும், விரைவாகவும் உழைக்கக்கூடிய ஒரு தொழிற்துறையாகத் திகழ்வதால் அதனைக் கட்டுப்படுத்துவது தொடர்ந்தும் சவாலாக உள்ளது.*

எனினும், இந்த நிலைமையினைக் கையாள உயர் மட்டம் தொடக்கம் அடிமட்டம்; வரை விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், விசேட தினங்கள், போட்டிகள் என பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் அந்தந்த சமூகத்துக்குப் பொருந்தக் கூடிய திட்டங்களை முன்னெடுக்கும் போதே விரைவானதும், நிரந்தரமானதுனான தீர்வனைப் பெற முடியும். பொதுவாக மனிதனில் நடத்தை மாற்றத்தைக் கொண்டு வர அவனுக்குப் பரீட்சயமானதும், அவனது நம்பிக்கைக் கோட்பாடுகள் சார்ந்ததுமான விடயங்களின் ஊடாகக் கையாளும் போது விரைவான தீர்வினைப் பெற முடியும். அந்த அடிப்படையில் ஆய்வுப் பிரதேச மக்கள் முஸ்லிம்களாகக் காணப்படுவதுடன் இஸ்லாம் முன்னரே ஆய்வுப் பிரச்சினைக்கு தீர்வினையும் வழங்கிய மார்க்கம் என்ற வகையில் ஆய்வுப் பிரதேச ஆய்வுப் பிரச்சனையைக் கையாள இஸ்லாமிய உளவளத்துணை பொறுத்தமானதாகக் காணப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள 2.56 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பினையும், 47,603 இக்கு மேற்பட்ட சனத்தொகையிணையும் (குடித்தொகை மதிப்பீடு, 2014) கொண்ட காத்தான்குடி எனும் பிரதேசத்தினை மையப்படுத்திய ஆய்வு இதுவாகும். இப்பிரதேசத்தில் போதைப்பொருள் பயன்படுத்தப்படுகின்றது, என்பதனை தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் அறிக்கை மற்றும் ஆய்வு பிரதேச பிரதே செயலக தரவுகளின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டது.

பொதுவாக போதைப் பொருள் என்பது உயிரினங்கள் நுகரும் போது உடலியல், உளவியல் ரீதியாக அசாதாரண மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய இரசாயன பொருட்களின் கலவையாகும். (Medical Dictionary, 2014) பொதுவாக போதைப்பொருட்கள் ஊட்டச்சத்து அளிப்பவற்றிலிருந்து வேறுபடுகின்றன. மேலும் போதைப் பொருட்கள் உள்ளிழுத்தல், ஊசி மூலம் ஏற்றுதல். உட்செலுத்தல், நாக்கின் கீழ் வைத்தல், தோலின் ஊடாக உறிஞ்ச வைத்தல் போன்ற முறைகளின் மூலமாக நுகரப்படுகின்றது. (H.P, Ritter ; M.M, ale ; J.M., Ritter; G.Henderson , 2011) மேலும் இப் போதைப் பொருட்கள் மத்திய நரம்பு மண்டலத்தின் செயல்பாடுகளையும், மனித செயற்பாடுகள் மற்றும் மனநிலையை பாதிக்கக் கூடியவை. ("An overview of alcohol and other drug issue" Retrieved>2015) மேலும் இப்போதைக்காக வேண்டி மதுபானம், புகையிலை, அபின், ஹெராயின், கஞ்சா, பான் மசாலா, கோக்கைன், எத்தனால், நிகாட்டீன் போன்றன பயன்னடுத்தப்படுகின்றன. (Lowinson joyce.H ; Ruiz Pedro ; Robert Millan ; Langrod Johon.G, 2005)

உலகளாவிய ரீதியில் 2020ம் ஆண்டு 27 கோடியே 50 இலட்சம் போதைப்பொருள் பாவனையாளர்கள் அடையாளப்படுத்தப் பட்டுள்ளதுடன் இதில் 36 மில்லியன் மக்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். (UNODC,2020) மேலும் இலங்கையில் கடந்த 5 வருட காலப்பகுதிகளில் அதிகம் Cannabis மற்றும் Heroin எனப்படும் போதைப் பொருள் பயன்படுத்தப்படுவதுடன் அதனுடன் தொடர்பான கைதுகளாக 2016ல் 75,249 பேரும், 2017ல் 81,076 பேரும், 2018ல் 95,684 பேரும், 2019ல் 86,893 பேரும், 2020 ல் 92,683 பேர் என்ற ரீதியில் காணப்படுகிறது.(HandBook of Drug Abuse Information, 2021)

போதைப் பொருள் பாவனை என்பது முழு மனித சமூதாயத்தையும் வழிகேட்டிற்குள் இட்டுச் சென்று கொண்டிருக்கும் காலகட்டம் இதுவாகும். ஒரு புறம் இதன் எதிர்மறையான விளைவுகள் பற்றி உலகளாவிய ரீதியில் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு கொண்டிருப்பதுடன் மறு புறம்

இதன் சந்தைப்படுத்தல்களும் தொடர்ந்த வண்ணம் உள்ளது. எனினும் அரச மட்டங்களிலிருந்து அதனை இல்லாதொழிக்கும் கைங்கரியங்களும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டுதான் உள்ளன. (பத்ரி, 2019).

பொதுவாக இலங்கையில் இரண்டு வகையான போதைப்பொருட்கள் காணப்படுகின்றன. அரசினால் அனுமதிக்கப்பட்டு வியாபாரம் செய்யப்படும் சாராயம், சிகரெட் போன்றவை, மேலும் அபின், ஹெராயின், கஞ்சா பான் மசாலா, கோக்கைன், எத்தனால் நிகாட்டீன் போன்ற அரசினால் தடுக்கப்பட்ட போதைப்பொருட்கள் எவ்வாறு இருப்பினும் இவ்விரு வகைகளும் மனிதனுக்கு ஊறு விளைவிப்பவையே.

தற்காலத்தில் மக்கள் மத்தியில் பரிணமிக்கக் கூடிய உளவியல், உளச் சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவும் ஒரு துறையாக உளவளத்துணை எனும் துறை உருவாகி வளர்ச்சி கண்டுள்ளது. உள ரீதியாக பிரச்சினைக்குட்பட்டவர்களுக்கு அப்பி;சினையிலிருந்து அவராகவே விடுபட வழங்கப்படும் உதவியே உளவளத்துணை ஆகும். இது தனிநபர் உளவளத்துணை, குழு உளவளத்துணை, குடும்ப உளவளத்துணை என்ற பரப்பில் காணப்படுவதோடு தேவையான துறைகளில், குறிப்பாக உளச்சமூகப்பிரச்சினைக்குரிய விடயங்களில் துறைசார் கவனம் எடுக்கின்றது. அவற்றில், போதைக்கு அடிமையானேருக்கான உளவளத்துணை, முதியோருக்கான உளவளத்துணை, நாட்பட்ட நோய்க்குள்ளானோருக்கான உளவளத்துணை, தற்கொலை முயற்சியில் ஈடுபட்டோருக்கான உளவளத்துணை போன்றவற்றை அடையாளப்படுத்தலாம். (ஜெயசிங்க, 2014).

தொழில்வாண்மையான உளவளத்துணையினை இஸ்லாமிய ஒழுக்க விதிமுறைகளுக்கு ஏற்பவும் இஸ்லாமிய நம்பிக்கை விழுமியங்களுக்கு ஏற்பவும் ஆன்மீக ரீதியாகவும் பிரயோகம் செய்வதே இஸ்லாமிய அடிப்படையில் உளவளத்துணை வழங்குவதாகும். (ஹுசைன் ரஸூல், 2016)

பொதுவாக இஸ்லாத்தில் உளவளத்துணையானது பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது என்பதனை நபியவர்களுக்கு வஹி இறங்கியபோது அதனை பெண் உளவளத்துணையாளராக முறையாக கையாண்ட கதீஜா (ரலி) அவர்களின் ஊடக உணரமுடிகின்றது.

இன்று இவ்வுளவளத்துணையானது மேற்கு மயப்படுத்தப்பட்ட பின்னணியில் நடைமுறைப்படுத்தப்படுவதால் அதனை முஸ்லிம்கள் மத்தியில் நடைமுறைப்படுத்துகின்ற பொழுது சில நடைமுறைச்சிக்கல்கள், ஆத்மக ரீதியான திருப்தியின்மை போன்ற விடயங்கள் அரங்கேறுகின்றன. இப்பின்னணியிலேயே முஸ்லிம்களுக்கு மிகச் சிறந்ததாக இஸ்லாமிய உளவளத்துணை அடையாளப்படுத்தப்படுகின்றது. (முனீதா சந்தர்வதி,2013). அல்குர்ஆன், ஸூன்னாவைப் பயன்படுத்தி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நுட்பங்களையும், கருவிகளையும் அல்லாஹ் எமக்குக் கொடுத்திருக்கின்றான். இதைத்தான் இஸ்லாமிய உளவளத்துணை முற்காலங்களிலும் தற்காலங்களிலும் பயன்படுத்துகின்றது. உளச்சுகாதாரப் பிரச்சினைகளுக்கு மார்க்க வழிகாட்டல்கள் மூலம் இது விடைகாண்கிறது என (சுந்தரம்,சிவயோகம்,2014). ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட ஆய்வு பிரதேசமானது முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசம் என்ற அடிப்படையில் போதைப் பொருள் பாவனை கையாளுவதற்கு இஸ்லாமிய உளவளத்துணையின் பங்கு இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.


ISBN: 978-624-5736-55-3

***2. ஆய்வுப் பிரச்சினை***

*காத்தான்குடி பிரதேச போதைப்பொருள் பாவனையாளர்களைக் கையாளுவதில் இஸ்லாமிய வழிமுறை அல்லாத உளவளத்துணை பயன்படுத்தப்பட்டு அவர்களை வழிப்படுத்துவதற்கான முன்னெடுப்புகள் செய்யப்படுகின்றன. இஸ்லாம் அனைத்து விடயங்களுக்கும் வழிகாட்டும் மார்க்கம் என்ற அடிப்படையில் இஸ்லாம் போதைப்பொருளினை உளவளத்துணை அடிப்படையில் கையாளுவதற்கும் வழிகாட்டியுள்ளது. மேலும் இஸ்லாமிய அடிப்படையிலான செயற்பாடுகளுக்கு ஆய்வு பிரதேச மக்கள் மத்தியில் அங்கீகாரமும் வரவேற்பும் காணப்படுகின்றது. அந்த அடிப்படையில் போதைப்பொருள் பாவனையை கையாள்வதிலும் அதனை குறைப்பதிலும் இஸ்லாமிய உளவளத்துணையின் பங்கினை வெளிக்கொண்டுவர வேண்டிய தேவை காணப்படுகின்றது.*

***3. ஆய்வின் நோக்கம்***

***பிரதான நோக்கம்***

*போதைப் பழக்கத்திற்கு உட்பட்ட முஸ்லிம் சேவைநாடிகளுக்கு உதவுவதில் இஸ்லாமிய உளவளத்துணையின் பங்கினை ஆராய்தல்.*

***துணை நோக்கம்***

*இஸ்லாமிய உளவளத்துணை எந்த அளவு போதைப்பொருளைத் தடை செய்வதில் பங்களிப்புச் செய்கின்றது என்பதை ஆராய்தல்.*

*போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்கு இஸ்லாம் கைகொண்ட வழிமுறைகள் என்ன என்பதை ஆராய்தல்.*

***4. ஆய்வு வினா***

*போதை பழக்கத்திற்குட்பட்ட காத்தான்குடியைச் சேர்ந்த முஸ்லிம் சேவை நாடிகளுக்கு உதவுவதில் இஸ்லாமிய உளவளத்துணையின் வகிபங்கு என்ன?*

***5. ஆய்வு முறையியல்***

*பண்பு ரீதியான இவ்வாய்வானது முதலாம் மற்றும் இரண்டாம் நிலை தரவுகளிலிருந்து விபரிப்பு ஆய்வு முறையியலை பயன்படுத்துகின்றது. மேலும் இவ்வாய்வுக்கான முதலாம் நிலை தரவுகள் சேகரிப்புக்காக பிரதேச செயலகம், பாடசாலை, உளவளத்துணை நிறுவனங்கள், பள்ளிவாயல், இஸ்லாமிய அறநெறிப் பாடசாலைகள் (மத்ரஸா) போன்றவற்றைச் சேர்ந்த 11 அதிகாரிகளிடம் நேர்காணல் செய்யப்பட்டதோடு காத்தான்குடிப் பிரதேச செயலக சமுதாய அபிவிருத்தி உத்தியோகத்தரின் ஊடாக போதைப் பொருள் பாவனையாளர்களின் எண்ணிக்கை தொடர்பான தரவுகள் பெறப்பட்டன. மேலும் ஆய்வுக்கான கோட்பாட்டு அமைப்புத் திட்டத்தினை நிறுவுவதற்காக இரண்டாம் நிலை தரவுகள் என்பன மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.*


ISBN: 978-624-5736-55-3

**6. இலக்கிய மீளாய்வு**

*இவ்வாய்வினை மேற்கொள்வதற்கு இஸ்லாமிய, உளவியல் மற்றும் சமூகவியல் துறை சார்ந்த இலக்கியங்கள் மீளாய்வுக் உட்படுத்தப்பட்டன. பேராசிரியர் மாலிக் பத்ரி (2017) எழுதிய இஸ்லாமும் போதைப்பொருள் ஒழிப்பும் ஒரு சமூக உளவியல் ஆய்வு (Hikamathul Islam fi Thahreemi khamr Dhirasa Nafsiyyah Ijthimaiyyah) எனும் போதைப்பொருள் தொடர்பாகவும் அதன் தடுப்பு முறை போதைக்கு அடிமையானோரை விடுவித்தல் போன்ற பல விடயங்கள் உளவியல் மற்றும் இஸ்லாமிய கண்ணோட்டத்தில் ஆராய்ந்த மேற்படி நூலானது பயன்படுத்தப்பட்டது. ரிட்லி ஜெயசிங்க (2010) எழுதிய "உளவியல்சார் உளவளத்துணை அணுகுமுறைகள்" எனும் நூலின் ஊடாக உளவளத்துணை தொடர்பாகவும் அதில் பயன்படுத்தப்படும் அணுகுமுறைகள் தொடர்பாகவும் மற்றும் உளவளத்துணையின் வகைகள் பண்புகள் திறன்கள் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் நோக்கப்பட்டது. மேலும் ஆய்வு பிரதேசத்தில் போதைப் பொருள் பாவனையின் ஆரம்பப்புள்ளியை ஆராயும் நோக்குடன் பிரதேசத்தைச் சேர்ந்த நாவலாசிரியரினால் எழுதப்பட்ட "ஜனநாயகர்கள்" எனும் நூல் பயன்படுத்தப்பட்டது. மேலும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் அறிக்கைகள், உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கைகள் மேலும் சில அறிக்கைகள் மற்றும் இணைய வழி தகவல்கள் போன்றவற்றின் ஊடாக இவ்வாய்வுக் கட்டுரை கட்டியெழுப்ப பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*7.* ***கலந்துரையாடலும் கண்டுபிடிப்புகளும்***

*முஸ்லிம் மக்கள்* ***1442*** *வருடங்களுக்கு முன் இறக்கப்பட்ட அல்குர்ஆனின் அடிப்படையிலும் அதனை கொண்டு வந்த முஹம்மத் நபி (ஸல்) அவர்களுடைய வழிகாட்டுதல்களையும் பின்பற்றி வாழ்பவர்களாக காணப்படுகின்றனர். அந்த அடிப்படையில் இஸ்லாமிய மார்க்கம் போதைப்பொருள் பாவனையினால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக குர்ஆனில்; பேசியுள்ளது. மேலும் நபி (ஸல்) அவர்களும் இது தெடர்பாக எச்சரித்துள்ளார்கள் "போதை தரும் அனைத்தும் ஹராமாகும்"* ***(அறிவிப்பவர் இப்னு உமர் (ரழி), ஆதாரம், முஸ்லிம் 3739)***

*அந்த அடிப்படையில் பொதுவாக ஆய்வுப் பிரதேச மக்கள் போதைப்பொருள் தடுக்கப்பட்ட விடயம் எனவும் அதனை பயன்படுத்துவது பெரும் பாவங்களில் ஒன்று என்ற அடிப்படை அறிவு பெற்றவர்களாக காணப்படுகின்றனர். ஏதேனும் நிகழ்வுகளின் போது கூட பயன்படுத்தக்கூடாது (Social Drink) என்ற அடிப்படை அறிவினை பெற்றவர்களாக காணப்படுகின்றனர். (நேர்காணல் : 14/06/2022) எனினும் ஆய்வு பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனையானது எக் காரணத்திற்காக எச்சந்தர்ப்பத்தில் ஊடுருவியது என்பது தொடர்பாக ஆராய்கின்ற போது ஜுனைதா ஷரீபின் "ஜனநாயகர்கள்" என்னும் நாவலின் ஊடக இதற்கான விடை கண்டறியப்பட்டது.*

*"கவலையைப் போக்குவது கரடி மார்க் பீடி! களைப்பைப் போக்குவது கரடி மார்க் பிடி உற்சாகத்தை தருவது கரடி மார்க் பீடி! இப்போதே சுவைத்துப் பாருங்கள் உடனே இன்பத்தைப் பெறுங்கள்" ஒலிபெருக்கி முழங்கியது.*

*இலவசமாக பீடிக்கட்டுகளை பெற்றுக் கொண்டவர்களில் பலர் சுற்றியிருந்த மென்தாளை நீக்கி பீடுயொன்றை உருவி உதட்டினுள் நுழைத்து தீக்குச்சியை மருந்து தடவிய பக்கத்தில் உராய்ந்து*


ISBN: 978-624-5736-55-3

*பற்றவைத்து புகையை உள்ளிழுத்து இருமலுடன் புகையைக் கக்கினர். நெய்னாக் குடி கிராமத்தின் ஆண்கள் பீடி தம் இழுக்கப் பழகியது இப்படித்தான். (ஜுனைதா ஸரீப், 2000, p.29)*

*போதை பாவனையின் ஆரம்ப புள்ளியாக காணப்படுவது புகைப்பழக்கமே ஆகும். மேலும் மேற்படி நெய்னாக்குடி என இங்கு குறிப்பிடப்படுவது ஆய்வு பிரதேசமான காத்தான்குடியின் குறிப்பிட்ட ஒரு பகுதியினையேயாகும். இதனை காத்தான்குடி வரலாறு ஓர் அறிமுகம் எனும் நூலினூடாக உறுதிப்படுத்த முடிகின்றது. அதாவது ஆய்வு பிரதேசத்தில் சம்மாட்டிக்குடி, நெய்னா ஓடாவிக்குடி, மரைக்காரன் காரக்குடி, ஓடாவிக் குடி, உதுமான் பிள்ளைகுடி, சாயக்காரன் குடி, கொச்சிக் குடி, இலவை குடி, மணலைப்போடி குடி, படையாண்ட குடி, மாந்திறா குடி, கச்சினா குடி என 12 குடிகள் காணப்பட்டதுடன் நெய்னா ஓடாவிக் குடி எனும் காத்தான்குடியின் ஆரம்பகால ஒரு பிரிவை மையப்படுத்தி இக்கதை நகர்த்தப்பட்டுள்ளதை உறுதி செய்ய முடிகிறது. (நேர்காணல்: 17/06/2022)*

*ஆய்வுப் பிரதேசத்தில் அதிகம் cannabis எனப்படும் போதைப் பொருள் பெரிதும் கையாளப்படுகிறது. (நேர்காணல்: 08/06/2022) மேலும் ஆய்வு பிரதேச போதைப்பொருள் பாவனையாளர்கள் கைது செய்யப்படும் போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை மற்றும் காத்தான்குடி தள வைத்தியசாலையில் (Treatment Centre) ஊடாக கையாளப்படுவதுடன் போதை பாவனையாளர்களின் குடும்பத்தாரால் கோரிக்கை விடுக்கப்படும் போதும் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் புனர்வாழ்வு நிலையங்களுக்கு (Rehabilitation Centre) அனுப்பி வைக்கப்படுகின்றனர். (நேர்காணல்: 14/06/2022)*

*மேலும் ஆய்வுப் பிரதேசத்தில் போதைப் பொருளுடன் தொடர்புபட்ட கைதிகளாக Subtants Abused Arrested 2020 ல் 134 பேரும் 2021ல் 194 பேரும் 2022 ஜூன்-15 வரையான காலப்பகுதிகளில் 88 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் புனர்வாழ்வு நிலையத்திற்கு 2020ல் 19 பேரும் 2021 35 பேரும் 2022 ஜூன்-15 வரையான காலப்பகுதிகளில் 15 பேரும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (நேர்காணல்: 14/06/2022)*

*ஆய்வுப் பிரதேசத்தில் மூன்று வகையான போதைப் பொருள்ப் பாவனையாளர்களை அடையாளப்படுத்த கூடியதாக இருந்தது (Druge Abuse Criteria)*

***பிரிவு 01:***

*நெருங்கிய உறவினர்களுக் கூட தெரியப்படுத்தாத வகையில் வாசனையற்ற போதைப்பொருட்கள் பயன்படுத்தக் கூடியோர் போதைப்பொருள் பயன்படுத்துவோரில் ஏற்படும் எந்த நடத்தை மாற்றத்தினையும் வெளிக்காட்டாத வகையில் செயற்பட இவர்கள் முற்படுகின்றனர்.*

***பிரிவு 02:***

*பரவலாக அனைத்து போதைப் பொருட்களும் பயன்படுத்தினாலும் சமூகத்திற்கு மறைந்து தன்மானத்தை காத்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்குடன் போதைப்பொருட்களைப் பயன்படுத்துவோர்.*


ISBN: 978-624-5736-55-3

***பிரிவு 03:***

*இப்பிரிவைச் சேர்ந்தோர் சமூகத்திற்கு அஞ்சாது போதையே கண் என செயற்படுகின்றனர். இவர்களினால் வீட்டு மற்றும் சமூக வன்முறைகள் இடம் பெறுவதுடன் இப் பிரிவைச் சேர்ந்தோரே போதைப்பொருள் பாவனைகள் தொடர்பான கணக்கெடுப்பின்போது கணக்கெடுக்கப்படுவதுடன் மேற்கூறப்பட்ட இரு பிரிவினரும் குடும்பமானம் மற்றும் சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுவோம் என்ற அச்சம் போன்ற காரணங்களுக்காக வெளிவருவதுமில்லை வெளிக்காட்டப்படுமில்லை. (நேர்காணல்: 14/06/2022)*

*பொதுவாக ஆய்வு பிரதேசத்தில் இஸ்லாமிய உளவளத்துணை என்ற நேரடி பெயரில் காணப்படாவிட்டாலும் பொதுவாக ஆங்காகாங்கு மார்க்க உபன்யாசங்கள் மூலமாக அவை வெளிப்படுத்தப்படுவதை காணக்கூடியதாக உள்ளது. மேலும் தனியார் உளவளத்துணையாளர்களை சேவைநாடிகள் சந்திக்கும் போது அவர்கள் இஸ்லாமிய துணையுடன் இணைத்து சேவை வழங்குவதையும் அவதானிக்க முடிந்தது. (நேர்காணல்: 09,15,22/06/2022)*

*மேலும் ஆய்வுப் பிரதேச மக்கள் உளவளத்துணை எனும் போது அதனை ஏற்றுக் கொள்ளும் வீதம் குறைவாகவே காணப்படுகின்றது. காரணம் இத்துறை மனநலம் பாதிக்கப்பட்டோரை கையாளும் துறையாகவே நோக்குகின்றனர். மேலும் போதைப்பொருள் பாவிக்கும் சேவை நாடி தானாக முன்வந்து உளவளத்துணை பெற்றுக்கொள்ளும் முறை அரிதாக காணப்படுவதுடன் உறவினர்களால் பலவந்தமாக அழைத்துவரப்படும் நிலைமையே காணப்படுகின்றது.* (நேர்காணல்: 22/06/2022) *எனவே இந்நிலைமையை மாற்றி உளவளத்துணை தொடர்பான அறிவு மக்கள் மத்தியில் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்துடன்* Social Revival Counselling Association (SRCA-2015), Innovation & Counselling Collage (MICC) *போன்ற நிறுவனங்கள் ஆய்வுப் பிரதேசத்தில் இயங்கி வருகின்றன.* (நேர்காணல்: 09,15/06/2022)

*மேலும் போதை பொருளுக்குப் பழக்கப்பட்டு ஆரம்பகட்டத்தில் காணப்படுவோரில் நடத்தை மாற்றத்தைக் கொண்டுவர நேரடியாக உளவளத்துணை என கையாளாது அவர்கள் ஏற்றுக்கொண்ட சமய நம்பிக்கையினூடாக உளவளத்துணைச் செய்முறையை முன்னெடுப்பது பொருத்தமானதாக கண்டறியப்பட்டது. (நேர்காணல்: 22/06/2022)*

*மேலும் ஆய்வு பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனையாளர்களை கையாள ஆரம்பமாக சேவைநாடியை ஒருநிலைப்படுத்த மூச்சுப் பயிற்சி (Relaxation) வழங்கப்படும். இச் செயன்றையின் போது இவர்களின் ஒவ்வொரு செயற்பாட்டுடனும் ஒரு இஸ்லாமிய நினைவூட்டல் கொடுக்கப்படும். அதாவது, அவர்கள் மெதுவாக சுவாசக்காற்றை உள்ளெடுக்கும் போதும், அதனை கொஞ்ச நேரம் உள்ளே பற்றிப் பிடித்து வைத்திருக்கும் போதும், மெதுவாக வெளியிடும் போதும் "ஸுபஹானல்லாஹ்" "அல்ஹம்துலில்லாஹ்" போன்ற இறை நினைவூட்டல் கொடுக்கப்பட்டு அப்பயிற்சி ஆத்மீகத்தோடு இணைந்து வழிநடாத்தப்படும் எகிப்தைச் சேர்நத பிரபல உள மருத்துவரான கலாநிதி ஜமால் மாழி என்பவரும் இதே அணுகுமுறையை செய்யும்*


ISBN: 978-624-5736-55-3

போது அவரகளது சமய உணர்வை அவர் பயன்படுத்திக் கொண்டார் அதனூடாக ஆரோக்கிய வாழ்வை நோக்கி அவரகளுக்கு வழிகாட்டினார் (பத்ரி, 2019)

போதைப் பொருள் பாவனை தொடர்பான யதார்த்த பூர்வமான உளவியல், மருத்துவ உண்மைகளை உளக்கற்கை (Psycho Education) மூலம் வழங்கும் அதேவேளை அது தொடர்பான இஸ்லாத்தின் நிலைப்பாடுகளும் தெளிவுபடுத்தப்படுகினறன. இங்கே போதைப் பாவனையால் உடலில் ஏற்படக் கூடிய தாக்கங்கள், உபாதைகள், குடும்ப வாழ்வில் இணையும் போது ஏற்படக் கூடிய இடைஞ்சல்கள் போன்ற விடயங்களும், உளவியல் ரீதியான விடயங்களும் அவை மனித உணர்வுகளில் எவ்வாறான எதிர்மறைத் தாக்கங்களை ஏற்படுத்தவல்லவை என்பது பற்றியும் உளவளத்துணையாளரால் யதார்த்த பூர்வமான முறையில் தெளிவுபடுத்தப்படுகினறது. இன்னும், இது பற்றி இஸ்லாம் என்ன நிலைப்பாட்டை கொண்டுள்ளது என்பதை ஆத்மீகத்தோடு இணைத்து சேவைநாடிக்கு வழங்கப்படுகின்றது. இதில் ஆரம்ப கால முஸ்லிம்கள் போதையை எவ்வாறு பயன்படுத்தினார்கள், பின்னர் தடை செய்யப்பட்டதும் அதிலிருந்து எவ்வாறு விடுபட்டார்கள் அதற்காக பயன்படுத்திய உத்திகள் போன்ற பலவும் அவர்களுக்கு உளக் கற்கையாக ஈமானோடு தொடர்புபடுத்தி வழங்கப்படுகின்றது. இங்கே நேர்மறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ நடத்தை மீள்வலுவூட்டல் (Reinforcement) இடம்பெறுகின்றது. (அருள்மொழி, 2017)

கி.பி. 7ஆம் நூற்றாண்டுகளில் மதீனா சமூகத்தில் இஸ்லாத்தை தழுவிய ஆரம்ப கால அரபிகளுக்கு மத்தியில் இழையோடிக் காணப்பட்ட மதுப் பழக்கத்தினை இல்லாதொழிப்பதில் இஸ்லாம் அளப் பெரும் பங்காற்றியது வரலாறுகாண் உண்மையாகும். அவர்கள் மதுவுக்கு மிக மோசமாக அடிமையாகி இருந்ததோடு அவர்களது அன்றாட வாழ்வியலோடு பிணைந்த இயல்பான ஒன்றாகவும் இருந்த இப்பழக்கத்தை விடுவித்து ஈன்மீக, சமூக, உளவியல் ரீதியாக செயற்றிறன் மிக்க மாற்றத்தை இஸ்லாம் ஏற்படுத்தியது. 20ஆம் நூற்றண்டில் அமெரிக்கா மது அருந்துவதை தடுக்க நிறைவேற்றிய சட்டங்களோ, எடுக்கப்பட்ட முயற்சிகளோ எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது தோல்வியைத் தழுவின. இஸ்லாம் அறிமுகமாகிய காலப்பகுதியில் அக்கால ஜாஹிலிய சமூகமானது போதைப்பொருள் பாவனையில் மூழ்கி காணப்பட்டது எனினும் மதுப் பாவனையால் சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டுவிடும் என்ற அறிவு கூட அற்ற சமூகத்தினை மதுப்பாவனையிலிருந்து அவர்களை மீட்டெடுக்க கட்டம் கட்டமான செய்முறைகளை இஸ்லாம் கடைப்பிடித்தது.

"(நபியே) மது, சூதாட்டம் குறித்து அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். ஷஅவ்விரண்டிலும் பெரும்கேடும், மனிதர்களுக்கு (சில) பயன்களும் இருக்கின்றன. எனினும், அவ்விரண்டின் பயனை விட அவ்விரண்டின் கேடு மிகப்பெரியதாகும்| எனக் கூறுவீராக! மேலும், தாம் எதைச் செலவு செய்வது? என்றும் உம்மிடம் கேட்கின்றனர். ஷ(தேவைக்குப் போக) மீதமுள்ளதை| எனக் கூறுவீராக! நீங்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காக இவ்வாறு அல்லாஹ் வசனங்களை உங்களுக்குத் தெளிவுபடுத்துகின்றான்." (2:219) இதில் மது, சூது இரண்டிலும் நன்மைகள் இருக்கின்றன என்று கூறப்படுகின்றது. விற்பனை மூலம் பொருளாதார நலனை ஒரு கூட்டம் பெறலாம். ஆனால், மது மற்றும் சூது இரண்டிலும் ஏற்படும் பாதிப்புக்கள் அதனால் ஏற்படும் நன்மைகளை விடப் பெரியது என்று கூறி மது மீது வெறுப்பு ஏற்படுத்தப்பட்டது. அடுத்த கட்டமாக,

*"நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் கூறுவது என்னவென்று அறியாதவாறு நீங்கள் போதையுடையோர்களாக இருக்கும் நிலையில் தொழுகையை நெருங்காதீர்கள்" (4:43) என்ற வசனம் அருளப்பட்டது. ஒரு முஸ்லிம் தினமும் ஐவேளை தொழ வேண்டும். தொழும் போது போதையுடன் இருக்கக் கூடாது என்றால் தொழுகைக்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னராவது குடிப்பதை அவசியம் நிறுத்தியாக வேண்டும். இப்படிப் பார்க்கும் போது அதிகாலை சுபஹ் தொழுகைக்கும், பகல் ழுஹர் தொழுகைக்குமிடையில் அவர்கள் குடிப்பதற்கு ஓரளவு நேரம் இருந்தது. இந்நேரம் பணிகள் தொடர்பில் பரபரப்பாக உள்ள நேரம். இரவுத் தொழுகைக்குப் பின்னர் குடிப்பதற்கு வாய்ப்பிருந்தது. இந்த சட்டத்தைப் போட்டு மதுப் பிரியர்கள் மதுவை விட்டும் தூரமாக்கப்பட்டார்கள். அடுத்த கட்டமாக பின்வரும் வசனம் அருளப்பட்டது.*

*"நம்பிக்கை கொண்டோரே! மதுவும், சூதாட்டமும், (வணக்கத்திற்காக) நடப்பட்டவைகளும், குறிபார்க்கும் அம்புகளும்- ஷைத்தானின் அருவருக்கத் தக்க செயலிலுள்ளவைகளாகும். எனவே, நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு அதைத் தவிர்ந்து கொள்ளுங்கள். ஷைத்தான் விரும்புவதெல்லாம் மது, சூதாட்டம் என்பவற்றின் மூலம், உங்களுக்கிடையில் பகைமையையும், குரோதத்தையும் ஏற்படுத்தவும், உங்களை அல்லாஹ்வின் நினைவை விட்டும், மற்றும் தொழுகையை விட்டும் தடுத்து விடவுமேயாகும். எனவே, நீங்கள் விலகிக்கொள்வீர்களா?| (5:90-91) மது, சூது மூலம் கோபமும் குரோதமும் ஏற்படுகிறது. இறை நினைவையும், தொழுகையையும் விட்டும் ஷைத்தான் உங்களைத் தூரமாக்குகின்றான். எனவே, இது கூடாது தடை செய்யப்பட்டது. நீங்கள் விலகிக் கொள்வீர்களா? என்ற வசனம் அருளப்பட்டதும் விலகிக் கொண்டோம் விலகிக் கொண்டோம் என முஸ்லிம்கள் மதுவை முழுமையாக ஒழித்தனர். மதீனா வீதியெங்கும் மது ஆறு ஓடியது என்று கூறும் அளவுக்கு மதுப் பீப்பாக்கள் கொட்டிவிடப்பட்டன. மதுபானச் சட்டிகள் உடைக்கப்பட்டன. வாயில் ஊற்றிய மதுவையும் கீழே துப்பினர். இவ்வாறு படிப்படியாகப் போதித்து இஸ்லாம் மது ஒழிப்பில் ஒரு மகத்தான புரட்சியையே ஏற்படுத்தியது.*

*பொதுவாக போதைப்பொருள் பாவனையானது பாவனை (Use)இ தவறான பயன்பாடு (Misuse), போதைக்கு அடிமை (Addicted), போதையுடன் சார்ந்து காணப்படல் (Dependant) என்ற நான்கு கட்டங்களில் காணப்படுகின்றது. மேற்கு மயப்படுத்தப்பட்ட உளவளத்துணை போதைப் பொருள் பாவனையினைக் கட்டம் கட்டமாக குறைக்க வேண்டும் என குறிப்பிடுகின்றது. எனினும் இஸ்லாம் அறிமுகமாகிய காலப்பகுதியில் மேற்படி கட்டம் கட்டமாக போதை பாவனையைக் குறைக்க முயற்சி எடுக்கக் காரணம் அவர்களிடம் ஈமான் என்ற ஒன்றே இல்லாத நிலையில் அவர்களிடத்தில் ஈமானியத்தை வளப்படுத்திய பின்னர் இறுதிக்கட்டமாக மதுபானத்தை முழுமையாக நிறுத்துமாறு கட்டளையிட்ட போது அவர்கள் அதனை முழுமையாக ஏற்றுக்கொண்டனர் எனினும் ஆய்வு பிரதேசத்தின் ஏற்கனவே இஸ்லாம், ஈமான் எனும் விடயங்கள் பரிச்சயமாக காணப்படுவதால் அவர்களுக்கு மேற்கத்தைய உளவளத்துணையின் அடிப்படையில் கட்டம் கட்டமாக போதைப்பொருள் பாவனையை குறைப்பதற்கு பதிலாக ஏற்கனவே அவர்களுக்கு பரிட்சயமான இஸ்லாமிய உளவளத்துணையின் ஊடாக போதைப்பொருள் பாவனையிலிருந்து விரைவாக மீட்க முடியும். (நேர்காணல்: 20/06/2022)*

*ஆய்வுப் பிரதேச மக்களிடையே இஸ்லாத்தில் போதைப்பொருள் போன்று ஹராமாக்கப்பட்டுள்ள பன்றியினைக் கையாளுவதனை முற்று முழுதாக தவிர்ந்து*

*செயல்படுபவர்களாக காணப்படுகின்றனர். மேற்படி மிருகத்தின் பெயர் குறிப்பிடப்படும் போது கூட அருவருப்பான கண்ணோட்டத்துடனும் ஊர்வழக்கில் 'வாய கழுவுங்க' என குறிப்பிடும் நிலை காணப்படுகின்றது. எனவே எவ்வாறு பன்றி இறைச்சி தடை செய்யப்பட்டது, என்ற மனநிலை ஆய்வு பிரதேச மக்கள் மத்தியில் காணப்படுகின்றதோ அதே மனநிலையை ஆழமாக இஸ்லாமிய உளவளத்துணையின் மூலம் போதைப் பொருளுக்கு பிரயோகிக்க முடியும். மேலும் பன்றியானது ஆய்வுப் பிரதேசத்தில் எவ்வாறு பெற்றுக் கொள்ளமுடியாத நிலை காணப்படுகின்றதோ அதே நிலைக்கு போதை பொருட்களையும் கொண்டு வருவதுடன், போதைப் பொருள் பாவனையாளர்களுடன் நேரடித் தொடர்பு கொள்ளும் விற்பனையாளரகள் மக்களுடன் இணைந்து வாழ்கின்றனர் எனவே, பொதுமக்களி ஒத்துழைப்பின் மூலமே அவர்களை அடையாளப்படுத்த முடியும் என்ற அடிப்படையில் பொதுமக்களுக்கு மேற்படி செயற்பாடானது பர்ளு கிபாயா எனும் சமூக கடமை என்பதை உணர்த்தி அவர்களை விழிப்புணர்வூட்டுவதன் மூலம் போதைப்பொருளை ஆய்வுப் பிரதேசத்தில் இல்லாதொழிக்க முடியும் என்பது ஆய்வின் ஊடாக கண்டுபிடிக்கப்பட்டது. (நேர்காணல்: 21/06/2022)*

***8. முடிவுரை***

*காத்தான்குடி பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனையாளர்கள் காணப்படுவதுடன் அதற்கு ஏற்றாற்போல் போதைப்பொருளுடன் தொடர்பற்ற குற்ற செயல்களும் நடந்தவண்ணம் உள்ளது. அந்த அடிப்படையில் அதனை கையாள்வதற்கு பொருத்தமான முறையாக ஈமான் எனும் தூண்டற் காரணியுடன் செயற்படும் இஸ்லாமிய உளவளத்துணையினைப் பயன்படுத்தும் போது விரைவானதும் நிரந்தரமான தீர்வினை பெற முடியும்.*

***9. பரிந்துரைகள்***

*• ஆய்வு பிரதேச சமூக நிறுவனங்கள் போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வை சமூகத்திற்கு ஏற்படுத்தல்.*

*• அவ் விழிப்புணர்வுகள் போதைப்பொருள் தொடர்பான எந்தவித அறிவு மற்றவர்களுக்கு போதைப்பொருள் தொடர்பான ஓர் அறிமுகத்தை வழங்கி போதைப்பொருளின்பால் ஆர்வத்தை ஏற்படுத்தாத வகையில் அமையாதிருத்தல்;;.*

*• சமூகத்திற்குப், பயந்து மறைந்து போதைப்பொருட்கள் பயன்படுத்துவோர் தொடர்பாக நெருங்கிய உறவுகள் அறியும் போது அவர்களுக்கு முறையான இஸ்லாமிய உளவளத்துணை வழங்குவதற்கு ஆரம்பக்கட்டத்திலேயே வழிவகை செய்யும் நோக்கில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு வழங்கல்.*

*• ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படும் மேற்கத்தைய உளவளத்துணை கற்ற உளவளத்துணையாளர்களுக்கு இஸ்லாமிய உளவளத்துணை தொடர்பாக அறிவூட்டல்.*

*• போதைப்பொருள் வியாபாரிகளை சமூகத்தின் உதவியுடன் கட்டுப்படுத்த முயற்சித்தல்.*

*• போதைப்பொருளுக்கு அடிமையானோரை தொடர்ந்து போதைப்பொருள் பாவனையை தூண்டக் கூடிய சூழலில் வைக்காது சூழல் மாற்றத்தினை மேற் கொள்ளும் நோக்குடன் ஜமாத்திற்க்கு அனுப்புதல்.*

*• இஸ்லாமிய உளவளத்துணையினை மையமாகக்கொண்ட புனர்வாழ்வு மத்திய நிலையங்களுக்கு ஆய்வுப் பிரதேச போதைப்பொருள் பாவனையாளர்களை சிகிச்சைக்கு அனுப்புதல்.*


ISBN: 978-624-5736-55-3

• *ஆய்வு பிரதேசத்தில் இஸ்லாமிய உளவளத்துணையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு வழிவகை செய்தல்.*

• *ஆய்வு பிரதேசத்தினை சேர்ந்தோர் ஏனைய பெரும் பாவங்களுக்கு அஞ்சி நடக்கும் நிலையை போதைப் பொருளுக்கும் பொதுமையாக்கல்.*

• *போதைப் பொருள் பாவனையாளர்கள் புணர்வாழ்வு நிலையங்களில் காணப்படும் காலப் பகுதியில் அச் சேவைநாடியின் குடும்பத்திற்கு பொருளாதார ரீதியான உதவிகளுக்கு வழிவகை செய்தல்.*

**உசாத்துணைகள்**


*இலங்கை ஜமாத் அன்சாரில் சுன்னத்ல் முஹம்மதியா தலைமையகம். (2015). தர்ஜுமதுல் குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்பு. இலங்கை: பறகாதெனிய.*

*பத்ரி, மாலிக். (2019). இஸ்லாமும் போதைப் பொருள் ஒழிப்பும் ஒரு சமூக உளவியல் ஆய்வு. (பி.எம்.எம். இர்பான், மொ.பெ.).* Dharga Town: Fuzin Texts.

*றியால், ஏ.எல்.எம். (2016). உளவியல் மூலக்கோட்பாடுகள். கல்முனை: மெஸ்ரோ வெளியீடு.*

*முகம்மட் இயாஸ், எல்.ரீ. (2018). மது மற்றும் புகைத்தல் பாவனையைக் கையாளுவதில் இஸ்லாமிய உளவளத்துணையின் பங்கு – சாய்ந்தமருது பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு. Proceedings of 5th International Symposium, Faculty of Islamic Studies and Arabic Languafe, South Eastern University of Sri Lanka.*

*ஸ்ரலின், இராசேந்திரம். (2016). ஆளுமை மலர உள ஆற்றுப்படுத்தல். யாழ்ப்பாணம்: ஆயர் இல்லம்.*

*ஜுனைதா செரீப். (2000). ஜனநாயகர்கள். சென்னை: குமரன் பப்ளிஷர்ஸ்.*

Buhary, M.H.M, Abdul Jawath, A.L. & Subair, S.M.M. (2004). *History of Katankudy An Inroduction.* Kattankudy: Federation of Mosques and Muslim Institution

Fathima Sheefa, M.I. & Fazlan, M.A.C.A. (2021). *"இஸ்லாமிய வழிகாட்டல்களில் பிரயோகிக்கப்பட்டிருக்கும் உளவளத்துணைச் சிகிச்சை முறைகள்." ஓர் விபரண ஆய்வு. Proceedings of 8th International Symposium, Faculty of Islamic Studies and Arabic Languafe, South Eastern University of Sri Lanka.*

Fathima Sheefa, M.I. & Safreen, MSM.. (2021). *போதைப் பழக்கத்திற்குட்பட்டோருக்கு அதிலிருந்து விடுபடுவதற்கு உதவி செய்வதில் இஸ்லாமிய உளவளத்துணையின் பங்கு : 2019ஆம் ஆண்டு கல்முனை நீதவான் நீதிமன்ற சமுதாய சீர்திருத்த கட்டளையாளர்களை மையப்படுத்திய ஆய்வு. Proceedings of 8th International Symposium, Faculty of Islamic Studies and Arabic Languafe, South Eastern University of Sri Lanka.*

Helfan, MLM., Mazahir, SMM. & Nairoos, MHM. (2017). *"போதைப் பொருள் பாவனையும் மகளிர் மற்றும் சிறுவர்கள் மீதான அதன் தாக்கங்களும்" ஏறாவூர் பொலிஸ் பிரிவை*

*மையப்படுத்திய கள ஆய்வு. Proceedings of 4th International Symposium, Faculty of Islamic Studies and Arabic Languafe, South Eastern University of Sri Lanka.*

Jeyasinghe, R. (2010). *உளவியல் சார் உளவளத்துணை அணுகுமுறைகள்.* Colombo: Kumaran Book shop.

Kanesarajah, K. (2013*). மதுபாவனையால் ஏற்படும் தாக்கங்கள் - ஓர் உளவியல் ஆய்வு. 3rd International Symposium, South Eastern University of Sri Lanka.*

Mahir, ILM. & Wazeema, TMF. (2020).Social Aspects of Drug Addiction in Sri Lanka. *Journal of Politics and Law*, 13(2), 54-62.

Mohammed Siyan, S., Sameera Umma, S., Fathima Aneesa, A. R., Shiyana, M.M. (2021). *போதைப் பொருள் பாவனையும் நடைமுறைசார் பிரச்சினைகளும் அக்கரைச்சேனை கிராமத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு.* Proceedings of 8th International Symposium, *Faculty of Islamic Studies and Arabic Languafe, South Eastern University of Sri Lanka.*

Research Division. (2017). Handbook of Drug Abuse Information-2017. Ministry of Law and Order & Southern Development: National Dangerous Drugs Control Board.

Research Division. (2019). *Current Drug Prevalence and Abuse Situation in Sri Lanka.* Ministry of Defence: National Dangerous Drugs Control Board.

Research Division. (2020). *Drug Related Stastics-2020*. Ministry of Defence: National Dangerous Drugs Control Board.

UNODC Research Report. (2021). *Global Overview: Drug Demand Drug Supply*. Sales: United Nations publication

Zunoomy, M.S., Asrin, M.A.A., Asan, A.P.M., Hilmee, M.S.M. Nafeer, S.L.M. (2018). *பல்கலைக்கழக மாணவர்களிடத்தில் இஸ்லாமிய உளவளத்துணை எண்ணக்கரு பற்றிய தெளிவு – ஓர் மதிப்பீட்டாய்வு: இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக முஸ்லிம் ஆண் மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு. The Book of Abstracts, 8th International Symposium (IntSym 2018), 2018, South Eastern University of Sri Lanka.*

***இணையப் பக்கங்கள்:***

https://www.newsplus.lk/local/6753/

https://yourkattankudy.com/2016/10/26/jummah/

https://www.tamilmirror.lk/%E0%AE% AE/73-222001

***நேர்காணல்***

1. Fathima Mafaza., Z.A, Grama Niladhari 166A, Kattankudy-02, North 08/06/2022


ISBN: 978-624-5736-55-3

2. M.A.F. Riztha, Counsellor, Maryam innovative & counselling collage. – 09/06/2022
3. M.M. Rasulsha, Community corrections development officer, Deparetment of community unit, divitional secretariat, kattankudy. – 14/06/2022
4. M.A. Mohamed Mihlar BSc.in psychology, counsellor, Secretary of Social Revival Counseling Association (SRCA) – 15/06/2022
5. A.L. Sabry M.A, P.G.D.E Principal - 17/06/2022
6. Ash-sheik Al-Hafil M.M.M. Ilham (Falahi) (BA) Imam Al-Aqsa grand jumma Masjid. 20/06/2022
7. A.L.M. Silmiya, Diploma in social service, Vice Principal Kattankudy Mahathu Suna an Nabaviyya ladies Arabic college. 21/06/2022
8. Ash-sheik M.I. Abdul Gafoor (Madani), (BA), Dip in Education, Rtd.ISA, SLTS – 1 Principal Al-Jamiathussideegiya katankudy 22/06/2022
9. A.R.M. Ihsan, BSc in psychology & Councelling, counsellor. 23/06/2022


ISBN: 978-624-5736-55-3